1978 செப்டம்பர் 12]

(ஆ) பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1972–73 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகளின் மீதும், இந்திய தணிக்கைத் துறை தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கையின் மீதுமான பொதுக் கணக்குக் குழுவின் நான்காவது அறிக்கையை குழுவின் சார்பில் அவைமுன் வைக்கிறேன்.

(9) அரசினர் தீர்மானங்கள்

(அ) சில குழுக்களின் உறுப்பினர்களுடைய பணிக்காலத்தை நீட்டித்தலும், வெற்றிடங்களை நிரப்புதலும் குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவையின் 244-வது விதியின்கீழ் பின்வரும் தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

'' 1977-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் அமைக்கப்பெற்ற

(1) மதிப்பீட்டுக் குழு,

(2) பொதுக் கணக்குக் குழு,

(3) பொது நிறுவனங்கள் குழு

ஆகிய குழுக்கள் எடுத்துக்கொண்ட பணிகள் இன்னமும முற்றுப்பெறவில்லை. ஆதலால் ஒவ்வொரு ஆண்டின் இறுதியில் மேற்படி குழுக்களின் பதவிக்காலம் முடிவடையும் என்னும் பேரவை விதிகள் முறையே 164 (2), 173 (3) மற்றும் 182 (அ) (3) ஆகியவற்றைத் தளர்த்தி, அக்குழுக்களில் தற்போது பணியாற்றுகின்ற உறுப்பினர்களே தொடர்ந்து 1979-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் தேதி முடிய பணியாற்ற வேண்டும்.

மேலும் பொது நிறுவனங்கள் குழுவில் ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங்களில்,

(1) திரு. எஸ். முத்துசாமி,

(2) திரு. டி. இராமசாமி,

(3) திரு. இ. தமிழரசன்,

(4) திரு. எம். எம். ஏ. ரசாக் ஆகியோரையும்,

பொதுக் கணக்குக் குழுவில் ஏற்பட்டுள்ள இரண்டு வெற்றிடங்களில்

(1) திரு. பி. எச். பாண்டியன்,

(2) திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா ஆகியோரையும் உறுப்பினர்களாக பணியாற்ற வேண்டுமென்று கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 174-வது விதியின்கீழ் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்களை பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

(10) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு, வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களை திருத்தி அமைத்தல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1978).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ''தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு, வேளாண்மைக் காரியங்கள் அல்லாத பிற காரியங்களுக்கான மின்சக்தி வழங்கல் குறித்த கட்டண வீதங்களைத் திருத்தியமைத்தல் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 39/1978.) பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு 1978—ம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு உணவகங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.